# பவானி நகராட்சி 15.03.2024–ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

<u>மன்றப் பொருள் : 1</u>

பவானி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் (2024 – 2025 முதல் 2026 – 2027 வரை) மற்றும் கடைகளுக்கான மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூன்றாம் அழைப்பு செய்யப்பட்டது. அதன்படி 13.03.2024 ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலத்தில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலத்தில் கலந்துகொண்ட நபர்களின் விபரம் | அரசாங்க மதிப்பு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1 | பழைய வாரசந்தை மையத்தில் நடை பெற்று வரும் தினசரி காய்கறி அங்காடி நுழைவு வாயில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள வணிக நிறுவனங்களுக்கு சரக்கு கொண்டு வரும் சரக்கு வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம். | எவரும் கலந்துக் கொள்ளவில்லை | ரூ.35,89,795/– | திரு. T.K.V.சண்முகம் த/பெ குப்புசாமி, 7A, தேவபுரம் 1 வீதி, பவானி.<br><br>ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.34,50,000/– |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

வாரசந்தை ஏலம் 13.03.2024 அன்று 12 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அரசு நிர்ணயம் செய்த தொகை ரூ. 35,89,795/–. மேற்படி வாரசந்தை குத்தகை இனத்திற்கு திரு.TKV சண்முகம் த/பெ குப்புசாமி என்பவர் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் தனது ஒப்பந்தப்புள்ளி கவரை போட்டுள்ளார்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி பெட்டியினை திறந்து பார்க்கையில் வாரச்சந்தை குத்தகை இனத்திற்கு திரு. T.K.V.சண்முகம் த/பெ குப்புசாமி என்பவர் ரூ.34,50,000/- -க்கு ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ளார். மேற்படி, வாரச்சந்தையின் (21-22 ஆம் ஆண்டிற்கு 31,01,000/-, 22-23 ஆம் ஆண்டிற்கு 32,56,050/- மற்றும் 23-24 ஆம் ஆண்டிற்கு 34,18,853/-) மூன்றாண்டு சராசரி தொகை ரூ.32,60,000/- மற்றும் சென்ற ஆண்டு குத்தகை தொகையான ரூ.34,18,853 -ஐ விட கூடுதலாக தொகை குறிப்பிட்டுள்ளார். மேலும், மேற்படி ஏலத்திற்கு இந்த ஆண்டு முதல் கூடுதலாக 18% சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஒப்பந்ததாரரால் அரசிற்கு செலுத்தப்பட வேண்டும். அதன்படி GST தொகை ரூ.6,21,000/- ஆகும். (ஏலத்தொகை ரூ.34,50,000/-+ GST ரூ.6,21,000/- மொத்தம் ரூ.40,71,000/- ).

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் விரைவில் அமலாக உள்ளதாலும், மூன்று மாதங்களுக்கு ஏல நடைமுறைகள் செயல்படுத்த இயலாத நிலையில், நகராட்சியின் நிதி இழப்பு ஏற்படும் என்பதாலும், நகராட்சி பணியாளர்களை கொண்டு துறைரீதியான வசூல் செய்திட நடைமுறை சிக்கல்கள் மற்றும் போதிய பணியாளர்கள் இல்லாததாலும், சென்ற ஆண்டு ஏலத்தொகையினை விட அதிகமாக ஏலத் தொகை குறிப்பிட்டதாலும் மேலும் கூடுதல் 18% GST வரி இந்த ஆண்டு முதல் ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும். (ஏலத் தொகை ரூ.34,50,000/-+ GSTரூ.6,21,000/- மொத்தம் ரூ.40,71,000/- ) ஆகவே, மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.1450/2020/அ2)

<u>மன்றத்தீர்மானஎண்</u> : 54

ரூ.34,50,000/- ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் : 2</u>

பவானி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் (2024 - 2025 முதல் 2026 - 2027 வரை) மற்றும் கடைகளுக்கான பொது ஏலம்

மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூன்றாம் அழைப்பு செய்யப்பட்டது. அதன்படி 13.03.2024 ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலத்தில் கலந்துகொண்ட நபர்களின் விபரம் | அரசாங்க மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையத்தில் தென்புறம் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமம். (4கடைகள்) | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | ரூ.8700/- | திரு.S.பிரகாஷ் த/பெ சங்கரன், 303, சொக்கராம்மன் காடு, பவானி. 88836-18155. கடை எண்.01 ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.8,800/- |
| 2 | | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | ரூ.8700/- | திரு.K.பாபு த/பெ கிருஷ்ணன், 151, மகாத்மா காந்தி ரோடு, பவானி. 99403-92534. கடை எண்.02 ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.8,800/- |
| 3 | | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | ரூ.8700/- | திரு.M.செல்லவேல் த/பெ முருகன், 62/99, மகாத்மா காந்தி ரோடு, பவானி. 99948-06774. கடை எண்.03 ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.8,800/- |
| 4 | | எவரும் கலந்துக் கொள்ள வில்லை | ரூ.8700/- | திரு.M.பழனிசாமி த/பெ முருகேசன், 129, காமராஜ் நகர், பவானி. 81487-51216. கடை எண்.05 ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ.8,800/- |

அலுவலக குறிப்பு:

பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தென்புறம் தகரப்பெட்டி வைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.01 திரு.S.பிரகாஷ் த/பெ சங்கரன், கடை எண்.02 திரு.K.பாபு த/பெ கிருஷ்ணன், கடை எண்.03 திரு.M.செல்லவேல் த/பெ முருகன்,

கடை எண்.05 திரு.M.பழனிசாமி த/பெ முருகேசன் ஆகியோரது ஒப்பந்தப்புள்ளி தொகையினை அங்கீகரித்து மன்றம் உறுதி செய்யலாம்.

(ந.க.எண்1450/2020/அ2)

<u>**மன்றத்தீர்மானஎண்**</u> : 55

உயர்ந்த பட்ச ஏலத்தொகை கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>மன்றப் பொருள் : 3</u>

பவானி நகராட்சிக்கு சொந்தமான கழிவு செய்யப்பட்ட பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவுமேலாண்மைப்பணி வாகனங்களை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு 13.03.2024 அன்று மறுஏலம் (இரண்டாம் அழைப்பு) விடப்பட்டதில் கீழ்கண்டவாறு ஏலம் கோரப்பட்டது.

| வ. எண் | ஏலம் விடப்பட்ட வாகனத்தின் விபரம் | அரசு நிர்ணயம் செய்த தொகை ரூ. | உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி கோரியவர் பெயர் மற்றும் விலாசம் | உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | Tata Engg & Locomotive CO Ltd (TN 36-B-6406) | ரூ.19900/- | ஸ்ரீ வேல்முருகன் டிரேடர்ஸ், ஆவடி, சென்னை. | ரூ.27500/- |
| 2 | Ashok Leyland (TN 36-J-8977) | ரூ.41400/- | | ரூ.51000/- |
| 3 | Tata Engg & Locomotive CO Ltd (TN 36-D-4020) | ரூ.29600/- | | ரூ.41000/- |
| 4 | Ashok Leyland (TN 36-J-8973) | ரூ.39800/- | | ரூ.54600/- |
| 5 | Bajaj Auto Ltd (3Wheeler ) (TN36 -H- 4614) | ரூ.3500/- | | ரூ.7600/- |
| 6 | Bajaj Auto Ltd (3Wheeler ) ( TN36 -H- 4613) | ரூ.3400/- | | ரூ.7700/- |
| 7 | Bajaj Auto Ltd (3Wheeler ) ( TN36 -H- 4612) | ரூ.3080/- | | ரூ.7800/- |

உயர்ந்த பட்ச ஏலத்தொகை கோரிய ஏலதாரர் ஸ்ரீ வேல்முருகன் டிரேடர்ஸ், ஆவடி, சென்னை என்பவரின் ஏலத்தினை இறுதி செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனைத்து வாகனங்களுக்கும் அரசு நிர்ணயம் செய்த தொகையினை விட கூடுதலாக ஏலம் கோரிய ஸ்ரீ வேல்முருகன் டிரேடர்ஸ், ஆவடி, சென்னை என்ற ஏலதாரரின் ஏலத்தொகையினை அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.812/2018/எச்1)

<u>**மன்றத்தீர்மானஎண்**</u> : 56

உயர்ந்த பட்ச ஏலத்தொகை கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>மன்றப் பொருள் : 4</u>

பவானி நகராட்சி வார்டு எண்.12, தேவபுரம் மயான பகுதியில் கழிவு நீர்– கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (STP cum FSTP) அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.125, நாள்.28.12.2023ன்படி அனுமதி அளித்துள்ளதின் பேரில் 05.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | ஒப்பந்ததாரரின்பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.கோகுல் வெங்கடேசன் | STP–FSTP கட்ட ஏற்படும் மதிப்பீட்டுத் தொகையில் 1% | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.14,99,000/– |
| 2 | திரு.கணேசன், ஒப்பந்ததாரர் | | அதிக ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.16,00,000/– |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.14,99,000/– அளித்துள்ள திரு.கோகுல் வெங்கடேசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1243/2023/இ1)

<u>மன்றத்தீர்மானஎண்</u> : 57

குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.கோகுல்வெங்கடேசன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ஒம்)இ.சிந்தூரி
தலைவர்
பவானி நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
பவானி நகராட்சி.